III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.473/2019

Deposition of witness for the Defendant/DW1
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 04-12-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜம்பு | Village | : |
| Father's Name | : சீயாலம் | Calling | : |
| Age | : | Taluk | : |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

பி.த.சா.5 சம்மந்தப்பட்ட மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதா என்றால் ஆம். அது சட்ட விரோதாமாக துண்டிக்கப்பட்டது. அந்த மின் இணைப்பு நீதிமன்ற உத்தவின் பேரில் துண்டிக்கப்பட்டது என்றால் இல்லை. ஆதலால் பி.த.சா.5 ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. பி.த,சா.3 மற்றும் 4 ன் அசல் ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பவர் பத்திரத்தில் பதிவு அலுவலகத்திலிருந்து போடப்பட்டிருக்கும் மேலெழுத்து அசல் ஆவணத்தை பார்த்தால் தான் தெரியவரும் என்றால் சரிதான். நான் வாடகை வாங்கிவரும் விவரங்களை எனது முதல்வரிடம் தெரிவிக்கிறேனா என்றால் இல்லை. எனது முதல்வரை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் தான் நான் அந்த விவரங்களை அவருக்கு தெரியப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. எனது முதல்வர்களை விசாரித்தால் தான் உண்மை தெரியும் என்றால் சரிதான். பி.த.சா.3 மற்றும் 4

முன்னிலையில் வாதி சொத்தில் அத்துமீறி நுழைந்து நான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரியல்ல. ஆதலால் தான் நான் பெற்ற மின் இணைப்பு நீதிமன்ற உத்தரவின் பேரில் துண்டிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே வாதி கேட்டுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.